15.10.2025

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண்.107/2018</u>

அ.சா.21

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அரி | | |
| த/பெ | பெருமாள் | | |
| கிராமம் | திருப்பச்சாவடி மேடு | தொழில் | கொத்தனார் |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 40/2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 15.10.2025 |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடையது ஆகும். சுமார் 10, 12 ஆண்டுகளுக்கு முன்பு நான் எனது வேலையை முடித்துவிட்டு சென்று கொண்டிருந்தபோது, காவல்துறையினர் என்னிடம் புதிய பேருந்து நிலையம் அருகில்

எழுதாத வெள்ளைத்தாளில் கையெழுத்து போட்டு விட்டு போ என்று சொல்லி கையெழுத்து வாங்கினார்கள். என் முன்னிலையில் காவல்துறையினர் யாரையும் விசாரணை செய்யவில்லை. என் முன்னிலையில் காவல்துறையினர் துணி போன்ற பொருட்கள் எதையும் கைப்பற்றவில்லை. என்னுடன் யாராவது கையெழுத்து போட்டார்களா? என்றால் இல்லை. முத்து த/பெ.பெருமாள் என்பவரை எனக்கு தெரியும். அவர் எனக்கு தம்பிதான். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து அ.சா.ஆ.11 ஆகும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து அ.சா.ஆ.12 ஆகும்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-

கடந்த 04/10/2014 அன்று காலை 11.00 மணிக்கு விழுப்புரம் தாலுக்கா காவல் ஆய்வாளர் இந்த வழக்கின் எதிரி சிலம்பரசன் வயது 24, த/பெ.கணேசன் அவர்களை, எல்லீஸ் சத்திரம், அணைக்கட்டு அருகில் காரணம் கூறி கைது செய்து, விசாரிக்கையில் எதிரி தாமாக முன்வந்து, எந்தவித அச்சுறுத்தாலும், ஆசை வார்த்தை இன்றியும், ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார் என்றும், அப்போது நானும், எனது தம்பியும், சாட்சியாக இருப்பதாக ஒப்புக்கொண்டதன் பேரில், காவல் ஆய்வாளர் எதிரி சிலம்பரசனை விசாரித்து, எங்கள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அப்போது ஆஜர் எதிரி சிலம்பரசன் எங்கள் முன்னிலையில், தான் கண்டம்பாக்கம் கிராமத்தை சேர்ந்தவன் என்றும், வக்கீல் ஆறுமுகத்திற்கும், அதே கிராமத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவருக்கும், முன்விரோதம் இருந்து வந்தது என்றும், கடந்த 2006 ஆம் வருடம் ஆறுமுகத்தை கொலை செய்ததாகவும், அந்த

வழக்கு திண்டிவனம் நீதிமன்றத்தில் நடைபெற்று வருவதாகவும், மேற்படி ராதாகிருஷ்ணனுடன் சிலம்பரசன் ஆகிய எதிரி கிரிக்கெட் விளையாடும் போது பழக்கம் ஏற்பட்டதாகவும், அவருடன் சத்தியசீலன், அன்பரசு, ரகு, புகழேந்தி, பிரதாப், சிவகுமார், அசோக் குமார், விநாயகமூர்த்தி, பலராமன் மகன் ராதாகிருஷ்ணன், ஆகியோர்கள் கிரிக்கெட் விளையாடுவார்கள் என்றும், அப்போது பழக்கம் ஏற்பட்டு கொலை வழக்கில் அடிக்கடி கோர்ட்டிற்கு சென்று வந்த விஸ்வநாதன் மகன் ராதாகிருஷ்ணன் என்பவருடன், பழக்கம் ஏற்பட்டதால் அதனால் அனைவரும் ஒன்றாக தண்ணி அடித்தோம் என்றும், ஆறுமுகம் அவரது அண்ணன் முருகன், ஆறுமுகம் கொலை வழக்கில் கண்ணுற்ற சாட்சி என்பதால், முருகன் என்பவருக்கு 28/08/2014ம் தேதி ஆறுமுகம் கொலை வழக்கில் முருகன் சாட்சி சொல்ல, போலீசார் சம்மன் கொடுத்தார்கள் என்றும், முருகன் சாட்சி சொன்னால் ராதாகிருஷ்ணனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்து விடும் என்பதால், எல்லோரும் ஒன்று சேர்ந்து முருகனை கொலை செய்ய வேண்டும் என்று முடிவு செய்தார்கள் என்றும், அப்போது ராதாகிருஷ்ணன், சிலம்பரசனிடம் கத்தியை கொடுத்து மறைத்து வைத்திருந்தார் என்றும், முருகன் வீட்டு அருகில் தெரு விளக்கை நிறுத்திவிட்டு அன்பரசன் முருகனின் தலையைப் பிடித்துக் கொண்டார் என்றும், சத்தியசீலனும், புகழேந்தியும், கால்களை பிடித்துக் கொண்டார்கள் என்றும், கோபாலகிருஷ்ணன் முருகனின் மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, 2 கைகளையும் பிடித்துக் கொண்டு திமிர விடாமல் பிடித்துக் கொண்டார் என்றும், ரகு, ராதாகிருஷ்ணன் ஆகியோர் வெட்டியதாகவும், மற்றவர்கள் பாதுகாப்பாக இருந்தார்கள் என்றும், சிலம்பரசன் அவராகவே போலீசார் முன்னிலையில் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் போலீசார் பதிவு செய்தார்கள் என்றும், மேலும் தன்னை அழைத்து சென்றால் தான் சம்பவத்தின் போது உடுத்தியிருந்த உடைகளை, எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னதன் பேரில் மேற்படி தேதியில், மதியம் 2 - 15

மணிக்கு, போலீசாருடன் நாங்களும், எதிரியும், எதிரி மறைத்து வைத்திருந்த உடைகளை எடுத்து ஆஜர் செய்ததை போலீசார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரிலும் நானும், என் தம்பியும் சாட்சியாக கையொப்பம் செய்தோம் என்றும், இதுகுறித்து போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

<u>இல்லை.</u>

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>